

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 06.12.2025 அன்று சென்னை கோட்டூர் புரம் அண்ணா நூற்றாண்டு நூலகம் அரங்கில் நடைபெற்ற முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்,கல்வி சுயதொழில் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். அதனைத் தொடர்ந்து நெல்லை பாளையங்கோட்டை நேருஜி கலையரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு,மாவட்ட ஆட்சியர் மரு.இரா. சுகுமார் தலைமையில் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப், மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன்,ஆணையாளர் மரு.மோனிகா ராணா துணை மேயர் ராஜ் ஆகியோர் முன்னிலையில் ரூபாய் 8.63 கோடி மதிப்பில் 3543 பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் டாக்டர் பாபா சாகேப் அம்பேத்கர் அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு , சென்னையில் நடைபெற்ற அரசு விழாவில் , முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம் , கல்வி , சுயதொழில் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார் . அதனைத்தொடர்ந்து , விருதுநகர் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி கலையரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.என்.ஓ.சுகபுத்ரா , தலைமையில், விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன் மற்றும் இராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.தங்கபாண்டியன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் பல்வேறு அரசுத்துறைகளின் சார்பில் 4,457 பயனாளிகளுக்கு ரூ .8.36 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார் . உடன் முன்னாள் சேர்மன் சுப்பாராஜா, விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.ஜி.ராஜகுரு, அரசு போக்குவரத்துக் கழக திமுக பொதுச் செயலாளர் ராஜ செல்வம், நகர தி.மு.க. செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.தனபாலன் ஆகியோர் இருந்தனர்.

### வட இந்தியர் சப்பாத்தி மாவுக்கு தரும் சலுகையை அரிசி மாவுக்கும் தரவேண்டும்!

# ‘மே 5 வணிகர் தினம்’ - அறிவித்த முதல்வருக்கு நன்றி - பாராட்டு!

## தி.மு.க. வர்த்தகர் அணி கூட்டத்தில் தீர்மானம்!

கோவை, டிச. 8 -

திமுகழக வர்த்தக அணி நிர்வாகிகள் மற்றும் மாவட்ட மாநகர் அமைப்பாளர்கள் தலைவர்கள் கூட்டம் கோயம்புத்தூர் காளப்பட்டி ரோட்டில் உள்ள ஜோன் கனெக்ட் ஹோட்டலில் நடைபெற்றது, கூட்டத்தில் மாநில மாணவர் அணி செயலாளர் ராஜீவ் காந்தி சிறப்புரை ஆற்றினார்.

மாநில செயலாளர் கவிஞர் காசி முத்துமாணிக்கம் தலைமையில் வர்த்தகர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

மாவட்ட கழக செயலாளர்கள், தொண்டாமுத்தூர் ரவி, துரை. செந்தமிழ் செல்வன் ஆகியோர் வரவேற்றுப் பேசினர்.

இந்நிகழ்ச்சியில் மாநில நிர்வாகிகள் முத்துசெல்வி. கிருஷ்ணகிரி சீனிவாசன், திண்டுக்கல் ஜெயன், அசோக்பாண்டியன், வனராஜ், தர்மசெல்வம் மாவட்ட அமைப்பாளர்கள் தென்காசி முத்து க்குமார். கிருஷ்ணகிரி மணி விஜயன், பவானி சுப்ரமணி யன், அந்தியூர் மகாலிங்கம், புதுக்கோட்டை பாரி. சிற்றரசு, கும்பகோணம் ராஜு, சென்னை தியாகராஜன், ஆத்தூர் மணிலால், வெங்கடேசன், விழுப்புரம் சங்கர், சங்ககிரி சேட்டு, ஊட்டி ராகமத்துல்லா ஆகியோர் கலந்து கொண்டனர்.

கோவை மாநகர் மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் பி.மாரி செல்வன் கோவை வடக்கு மாவட்ட அமைப்பாளர் வேலுச்சாமி ஆகியோர் நன்றி தெரிவித்தனர்.

தமிழரின் பண்பாடு!

கை மாறினாலே காரிய மாற்றும் இந்திய அரசியல் வானில் கைமாறு கருதாது பத்தாயிரம் கோடி போனாலும் குலக் கல்வியையும் இந்தி சமஸ்கிருதத்தையும் திணிக்கும் ஒன்றிய அரசின் கல்வித் திட்டத்தை அமல்படுத்த மாட்டேன் என உறுதியாக நின்று தமிழரின் பண்பாட்டை மீண்டும் தூக்கி நிறுத்திட்ட தூயவர் தளபதிக்கு இம்மாமன்றம் நன்றி தெரிவிக்கிறது.

ஒன்றிய அரசின் வியாபாரிகள் கட்டாய பயந்து போன மிரட்டலுக்கு தந்தையை கத்தியை காட்டி மகளை திருமணம் செய்தது போல பாதிக்கப்பட்டவர்களையே அழைத்து பாராட்டு கூட்டம் நடத்த சொன்ன ஒன்றிய நிதி அமைச்சரை கண்டிப்பதுடன் முதல் நாள் 10.11.2025 இரவு டெல்லி செங்கோட்டை அருகே விபத்தில் 14 பேர் மரணம் உடல்கள் அடையாளம் கண்டு உறவினர்களிடம் ஒப்படைத்து அடக்கம் செய்த கை காய்வதற்குள் 11.11.2025 மாலையே தனக்கு பாராட்டு கூட்டம் நடத்திக் கொண்ட ஈவு இரக்கமற்ற சேடிஸ் நிர்மலா சீதாராமன் அவர்களின் செயலை வன்மையாக கண்டிக்கிறோம்.

**மே 5 வணிகர்தினம் முதல்வருக்கு பாராட்டு!**

தானே விதித்து பத்தாண்டு காலம் கசக்கி பிழிந்து விட்டு தானே GST 2.0 வரி சீராய்வு & வரி குறைப்பு என வியாபாரிகளை ஏமாற்றிய ஒன்றிய அரசை கண்டிக்காமல் பாராட்டு நடத்திய தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பை கண்டிப்பதுடன் பாஜக ஒன்றிய அரசு இந்திய அளவில் வணிகர்களுக்கு நல வாரியம் அமைத்து தரவில்லை ஆனால் தமிழகத்தில் ஆலோசனை குழுவில் 30 பேர் கொண்ட வணிக நல வாரியத்தில் 12 பேர் நல வாரியம் உறுப்பினர்களாக வணிகர் சங்கதலைவர் கூறிய வணிகர்களுக்கு நல வாரியத்திற்கு தந்த தளபதிக்கு, 1983 முதல் போராடியிருந்த தளபதியால் மே 5 வணிகர் தினம் என அறிவித்தமைக்கு எங்கள் பாராட்டை தருவதுடன் தமிழ்நாடு வணிகப் பேரவை பாராட்டு கூட்டம் நடத்திட சுட்டிக் காட்டுகிறோம்.

சிலுவையை பார்த்தால் ஏசுவின் நினைவு வரும்! ரோஜாவை பார்த்தால் நேருவின் நினைவு வரும்! வள்ளுவர் கோட்டத்தைக் கண்டால் கலைஞரின் நினைவு வரும்! பள்ளி குழந்தைகளின் காலை உணவு திட்டத்தைக் கண்டால் தளபதி நினைவு வரும்! செங்கலையும் செஸ் போர்டையும் பார்த்தால் துணை முதல்வர் நினைவுக்கு வரும்!

பன் தனியாக வாங்கினால் வரி இல்லை! பட்டர் வாங்கினால் வரியில்லை! ஆனால், பன்னுக்குள் பட்டர் ஜாம் இருந்தால் 18% வரியா? என்பதும் வட இந்தியர் இனிப்பு அதிகம் சாப்பிடுவதால் இனிப்புக்கு 5 சதவீதம் வரியும்,

காரத்திற்கு 18% வரி என்பது தவறு என்று சுட்டிக்காட்டிய அன்னபூர்ணா ஒனரை அழைத்து மன்னிப்பு கேட்க வைத்த இடியமினுக்கு எங்கள் கண்டனத்தை தெரிவித்துக் கொள்வதுடன் மன்னிப்பு கேட்க வைத்தமைக்காக அன்னபூர்ணா உரிமையாளருக்கு எங்கள் ஆறுதலையும் வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

வட இந்தியர் சாப்பிடும் சப்பாத்திக்கு தரும் சலுகையை அரிசிமாவுக்கும் தந்துவிட வேண்டுகிறோம். பாரத பிரதமராக மன்மோகன் சிங் இருந்த காங்கிரஸ் காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட இருந்த GSTயை மீண்டும் தந்திட ஒன்றிய அரசசை வேண்டுகிறோம்.

**இளைஞர் எழுச்சி நாள் விழா!**

ஒற்றைச் செங்கலால் செங்கோட்டையை அலற வைத்த சின்னவருக்கு 27ஆம் தேதி பிறந்த எழுச்சி விழா துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு விழா எடுத்திட பிறந்த நாள் அன்று பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் போடுவது என்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புடன் கொண்டாடுவது என்றும் முடிவெடுகக்கப்பட்டது.

மதுரை மாநகரில் மதுரை கோவை மாநகரில் 20 லட்சம் மக்கள் இருந்தும் அதைவிட மக்கள் தொகை குறைவான ஆக்ரா, இந்தூர் மற்றும் பாட்னாவில் மெட்ரோ ரயிலுக்கு ஆதரவு தந்த இந்திய ஒன்றிய அரசு கோவை, மதுரை மாவட்டத்திற்க்கு தர மறுப்பது மிகப்பெரிய தவறு.

சென்னைக்கு இரண்டாவது திட்டத்திற்கு அனுமதி தந்துவிட்டு நிதி தரவில்லை. கோவை மதுரையில் மெட்ரோ ரயில் திட்டத்திற்கு மோடி அரசு அனுமதி வழங்காததால் இம்மாமன்றம் கண்டனம் தெரிவிப்பதுடன் கோவை மதுரை மெட்ரோ ரயில் திட்டத்தை விரைவில் அனுமதி வழங்க வேண்டுகிறோம்.

தமிழகத்துக்கு மேலும் 1200 நீதிமன்றங்கள் தேவை என்ற உயர் நீதிமன்ற நீதிபதி தீ பரத் சக்கரவர்த்தி கூறியதற்கு ஏற்ப புதிய 1200 நீதிமன்றங்கள் தேவை என வற்புறுத்தி ஒன்றிய அரசை தந்திட வேண்டுகிறோம்.

அரசியல் அமைப்பை திருத்தியவாது ஆளுநருக்கு காலக்கெடு விதிக்கும் வரை ஓய மாட்டோம் என தைரியமாக மாறுதட்டி தமிழக முதல்வர் அவர்கள் கூறியதை இம்மாமன்றம் கைதட்டி வரவேர்கிறது.

பீகார் தேர்தலுக்கு தேர்தல் நேரத்தில் தேர்தல் கமிஷன் மூலம் 70 இலட்சம் சிறுபான்மையினர் வாக்குகளை திருடிய போதும், தலைக்கு பத்தாயிரம் மகாராஷ்டிரா ஸ்டைலில் பெண்களுக்கு வங்கியில் செலுத்திய போதும் அசராது 35 இடங்களை பெற்றதுடன் அதிக வாக்கு வாங்கிய முதல் கட்சி என பெயர் பெற்றமைக்காக தேஜஸ்வி யாதவுக்கு பாராட்டு தெரிவித்துக் கொள்வதுடன் ஒன்றே கால் கோடி வாக்கு பெற்ற தேஜஸ்வி யாதவ் இந்தியாவின் தலைசிறந்த முதல்வர் ஸ்டாலின் தான் என்று சொன்னமைக்காக நன்றியும் பாராட்டையும் இம்மாமன்றம் தெரிவிக்கிறது.

தமிழர்களை ரவுடி என பீகார் தேர்தலில் சொன்ன மோடிக்கு வரும் தேர்தலில் தமிழக மக்கள் தக்க பாடம் கொடுப்போம் என தீர்மானிக்கப்படுகிறது.

எஸ்.ஐ.ஆர்.க்கு ஆதரவு போராட்டம் நடத்திய எடப்பாடிக்கு எட்டப்பா பாடிக்கு கண்டணம் தெரிவித்துக்கொள்கிறோம்.

இவ்வாறுதீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# கடலூர் கிழக்கு மாவட்டக் கழகக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!

கடலூர், டிச. 8 -

முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் தலைமையில் காணொலி காட்சி வாயிலாக நடைபெறும் மாவட்ட கழக செயலாளர்கள் கூட்டத்தில் நமது கடலூர் கிழக்கு மாவட்ட கழக நிர்வாகிகள் கலந்துகொள்ளும் கூட்டம் இன்று காலை 09.00 மணியளவில் காட்டுமன்னார்கோயில் MRK கூட்ட அரங்கில் நடைபெற உள்ளது என்று கடலூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் எம். ஆர். கே. பன்னீர்செல்வம் அறிவித்துள்ளார்.



இது குறித்து மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்களின் தலைமையில் காணொலி காட்சி வாயிலாக நடைபெறும் மாவட்ட கழக செயலாளர்கள் கூட்டத்தில் நமது கடலூர் கிழக்கு மாவட்ட நிர்வாகிகள் கலந்துகொள்ளும் கூட்டம் 08/12/2025 திங்கட் கிழமை காலை 09.00 மணியளவில் காட்டுமன்னார்கோயில் MRK கூட்ட அரங்கில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமை கழக சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், மாவட்டக் கழக தொகுதி பார்வையாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### வடக்கு மண்டல இளைஞர் அணி சிறப்பு கூட்டத்தில்

# வேலூர் தெற்கு மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் திரளாகப் பங்கேற்பு!

## மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்!

வேலூர், டிச. 8 -

வேலூர் தெற்கு மாவட்டஅவசர செயற்குழு கூட்டம் 06.12.2025 அன்று மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி தலைமையில் வேலூர் தெற்கு மாவட்ட திமுக அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வேலூர் தெற்கு மாவட்ட செயலாளரும் அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினருமான ஏ.பி.நந்தகுமார் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு கீழ்கண்ட தீர்மானங்கள் குறித்து விரிவாக செயற்குழு நிர்வாகி களிடையே சிறப்புரை ஆற்றினார்.

இக்கூட்டத்தில் வேலூர் மாநகர செயலாளரும் வேலூர் சட்டமன்ற உறுப்பினருமான ப.கார்த்திகேயன் குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமலுவிஜயன் மற்றும் மாவட்ட நிர்வாகிகள் தலைமைச் செயற்குழு -பொதுக்குழு உறுப்பினர்கள் ஒன்றிய நகர பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில்கீழ் கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறை வேற்றப் பட்டது.

வாக்களர் பட்டியல் சிறப்பு சுருக்க திருத்த (SIR) பணியில் வேலூர் தெற்கு மாவட்ட திமுகவுக்கு உட்பட்ட அனைத்து நிர்வாகிகளும் தேர்தல் ஆணையம் கொடுக்கப்பட்ட ஒரு மாத கால அவகாசத்திற்குள் 807 வாக்குச்சாவடிகளும் திறம்பட பணியாற்றி பணிகளை செவ்வனே முடித்த அத்துணை கழக நிர்வாகிகளுக்கும் வேலூர் தெற்கு மாவட்டதி.மு.க. சார்பில் நன்றியை தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

எதிர் வரும்14.12.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று திருவண்ணாமலையில், கழக தலைவர் முதல்வர் அவர்கள் பங்கேற்கும் வடக்கு மண்டல இளைஞர் அணி மாநாட்டில் மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து இளைஞர் அணி நிர்வாகிகளும் திரளாக கலந்துகொள்ள ஏதுவாக மாநகர ஒன்றிய நகர பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆகியோர்கள் உரிய முறையில் ஏற்பாடு செய்து மாநாட்டில் கலந்து கொண்டு நற்பெயர் ஈட்டித் தர வேண்டுமாய் கேட்டுக்கொண்டு தீர்மானம் நிறை வேற்றப்படுகிறது.

ஒன்றிய பா.ஜா.க. அரசும் அதன் ஏவல் துறையுமான இந்திய தேர்தல் ஆணையத்தின் உள்நோக்கத்துடன் தற்போது நடைமுறை படுத்தப்பட்டுள்ள (SIR)திட்டத்தை கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள், ஜனநாயகத்திற்கு புறம்பான செயல் என்று ஒருபுறம் இத்திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தாலும் SIR பணியை தமிழ்நாட்டில் வேறு எந்த ஒரு அரசியல் கட்சியும் செயல்படுத்தாத இத்திட்டத்தை அணைத்து கழக நிர்வாகிகளின் பங்களிப்புடன் மிக நேர்த்தியாக திட்டமிட்டு கொடுக்கப்பட்ட கால அவகாசத்திற்குள் சிறப்பாக நிறைவேற்றிட தேவையான ஆலோசனைகளையும் தக்க கருத்தையும் கழகத்தினருக்கு வழங்கி, தான் ஒரு தலைசிறந்த முதல்வர் மற்றும் கட்சியின் தலைவர் என இதன் மூலம் நிருபித்து தன்னிகரற்ற தலைவராக திகழும் தமிழ்நாடு முதல்வர் மாண்புமிகு கழக தலைவர் அவர்களின் கரத்தினை வலுப்படுத்த எந்நேரமும் கண் அயராது களப்பணி ஆற்றுவோம் என தீர்மானித்து தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.




தேனி வடக்கு மாவட்டம் குச்சனூர் பேரூர் செயலாளர் திலிப் குமார் ஏற்பாட்டில் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நேற்று தேனி வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. வழிகாட்டுதலின்படி குச்சனூர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் ஒன்றிய கழகச் செயலாளர் கண்ணியம்பட்டி முருகேசன் முன்னிலையில் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது. இதில் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் அண்ணல் அம்பேத்கரின் நினைவு தினத்தை முன்னிட்டு அவரது சிலைக்கு மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்த நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், மாநகர செயலாளர் துணை மேயர் நா.குணசேகரன்,மேயர் எஸ்.முத்துதுரை, பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே.எஸ்.ரவி, மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் கொத்தமங்கலம் சேது, மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் திருமதி ஹேமலதா செந்தில் மற்றும் மாநகர நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.



நெல்லை மேற்கு மாவட்ட தி.மு.க அலுவலகத்தில் திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் அன்புத் தளபதியார் அவர்களின் தலைமையை ஏற்று ஆலங்குளம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பாப்பாக்குடி ஒன்றிய பா.ஜ.க இளைஞரணி அமைப்பாளர் கருத்தப்பாண்டி மற்றும் குத்தப்பஞ்சான் அ.தி.மு.க.வை சேர்ந்த (BLA2) அருள்மேகம் ஆகியோர் மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் முன்னிலையில் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.நிகழ்வில் மாநில விவசாய தொழிலாளரணி துணைச் செயலாளர் கணேஷ்குமார் ஆதித்தன், ஆலங்குளம் தெற்கு ஒன்றிய சிவகுமார், வி.கே.புரம் நகர செயலாளர் கி கணேசன், மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் பிரேம் ஆனந்த்,கிளைச் செயலாளர் அன்பரசன் மற்றும் ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் சுந்தர், அம்பை நகர தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் சரவணன் சக்திவேல் ஆகியோர் உள்ளனர்.